# 12C உருக்காட்டல், கலந்துரையாடல் மற்றும் ஆழமான பகுப்பாய்வு

1. தயவு செய்து 12 B யிலுள்ள பயிற்சி எடுத்துக் காட்டுகளை மீளாய்வு செய்யவும். எதனை நீங்கள் உங்களது சுற்றாடலில் சம அளவில் நடைமுறைப் படுத்துவீர்கள்? அளிக்கை செய்யப்பட்ட மூன்று செயற்றிட்டத்திலிருந்து உங்களுக்குத் தோன்றும் கருத்துக்கள் யாவை?

2. அடுத்துவரும் அரையாண்டில் நீங்கள் அரச பள்ளி ஆசிரியருடன் இணைந்து செயற்படுத்தமுடியுமான கருத்துக்கள் அல்லது கருத்திட்டங்கள் போன்ற திட்டவட்டமான இரண்டு நிகழ்வுகளை குறைந்த அளவு திட்டமிடவோ கலந்துரையாடவோ தயவுசெய்து முயற்சி செய்யுங்கள்.

3. நீங்கள் யாருடன் உங்கள் தொழில் சார் தொடர்பாடலை வைத்துள்ளீர்கள் எனவும் இன்றியமையாத நபர்கள் மற்றும் நிறுவனங்கள் என்பனவற்றின் பெயர்கள், தொடர்புகள், ஒரு சுருக்கமான தன்-விவரம் ஆகியவற்றைக் கொண்ட ஒரு பட்டியலைத் தொகுக்கவும்!

4. நீங்கள் நெருக்கமான தொடர்பை வைத்துக் கொள்ளல் அல்லது அதிகளவில் தீவிர ஒத்துழைப்பைப் பேண விரும்பும் நபர்கள் அல்லது நிறுவனங்கள் பற்றிய குறிப்பை எடுப்பதில் கவனம் செலுத்துங்கள். இது எவ்வாறு பயன் அடையமுடியும் என்பதை எண்ணிப் பார்த்து கலந்துரையாடவும!.

5. இயல் 12 A.1 ஆனது நீங்கள் வழமையான அரசபள்ளி ஆசிரியருக்கு வழங்கக்கூடிய உங்கள் தன்-விவரம் ஆக்குவது பற்றி விளக்கப்பட எடுத்துக்காட்டுடன் விவரிக்கின்றது. அத்தகைய உங்களின் தன்-விவரத்தை ஏற்பாடு செய்யுங்கள்!

6. பா.மொ.க ஆசிரியர் என்ற வகையில் நீங்கள் உங்களுடைய சட்டகத்தின் நிலையைப் பற்றி உணர்ந்து, முறையே உங்களது மனநிறைவு அல்லது ஓரளவு குறைந்த மனநிறைவு என்பவற்றைக் குறிப்பிடுங்கள். மனநிறைவு அடையாத கூறுகளை மாற்றுவதின் வாய்ப்புகளைக் கருத்திற்கொள்க. கல்வி ஆண்டின் இறுதியில் அல்லது அடுத்த கல்வியாண்டின் தொடக்கத்தில் நீங்கள் முன்மொழிய வேண்டிய மூன்று உறுதியான அளவீடுகளை எண்ணிப்பாருங்கள்!

7. உங்களது தற்போதைய பணிச் சூழ்நிலையில் (பாடசாலை வகை, தெரிவு அடிப்படை, மொழியிலும் மற்றைய பரப்புகளிலும் ஊக்குவிப்பு நிகழ்சிகள்) கல்வி முறைமை கொண்டிருக்க வேண்டிய தனித்துவமான பண்புகள் பற்றிக் கருத்தில் கொண்டு கலந்துரையாடுக. தவறிய தகவல்களை நீங்கள் எங்கே பெற்றுக்கொள்ள முடியும்? (இணையம், தொழில்சார் தோழர்கள், முதலியன)

8. உங்களது தாய்நாட்டில் இருக்கின்ற கல்வி அமைப்பில் ஒற்றுமைகள் மற்றும் வேற்றுமைகளை கருத்தில்கொள்க. இரண்டு கல்வி சார் முறைமைகளை நடுவண் ஒற்றுமை, வேற்றுமைகளுடன் ஒப்பிட்டு வரைக. உங்களது மாணவர்களுக்கு கடினங்களை உருவாக்கும் வேற்றுமைகள் யாவை? புலம்பெயர் நாட்டின் எக்குறிப்பிட்ட பண்புகள் உங்கள் மாணவர்களின் வாய்ப்பாக அமையும்?

9. தகைமைப் பரப்பு, பாடசாலை மொழி, மனித இனமும் சுற்றாடலும் என்பவை தொடர்பாக நாட்டின் அரச நிலையான பாடவிதானத்தைப் படியுங்கள். எவ்வாறு அவற்றை பா.மொ.க வுடன் தொடர்புபடுத்தலாம் என ஆராயுங்கள்.

III